இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 14-02-2025

# பிரேன் சிங் மட்டுமா பிழை செய்தார்?

**ஒரு முதலமைச்சர் எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டு மணிப்பூர் மாநிலத்தை ஆண்ட பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன் சிங். ஒரு மாநிலத்தையே நாசம் செய்துவிட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து தனது பதவியை விட்டு விலகி இருக்கிறார் அவர். இவரையே தொடர்ந்து ஆள விட்டதும், அனுமதித்ததும் பா.ஜ.க. தலைமையின் மாபெரும் தவறாகும். மணிப்பூர் மக்களைப் பற்றி அவர்களுக்கு ஒரு துளிகூட அக்கறை இல்லை என்பதன் அடையாளம்தான் பிரேன் சிங் இரண்டாண்டு காலம் முதலமைச்சராக இருக்க விட்டதும் ஆகும்.**

‘சோசியல் இன்ஜினியரிங்’ என்ற பெயரால் சமூகங்களுக்குள் மோதலை உருவாக்குவது பா.ஜ.க.வின் பாணியாகும். அதனைத்தான் பல மாநிலங்களில் செய்து வருகிறது பா.ஜ.க. மணிப்பூரிலும் அதனைத்தான் செய்தது.

மணிப்பூர் மாநிலத்தில் 53 சதவிகிதமாக உள்ள மைதேயி சமூகத்தினர் தங்களுக்கு பழங்குடியினத் தகுதி கோரி வருகிறார்கள். மாநில மக்கள் தொகையில் 40 சதவிகிதம் உள்ள நாகா, குக்கி பிரிவினர் இதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறார்கள். மைதேயி - குக்கி ஆகிய இரண்டு பிரிவினரும் மாறுபட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள். அதனால் விரிசல் அதிகம் ஆக்கப்பட்டு விட்டது. மைதேயி பிரிவினர் இதுவரை ஓ.பி.சி. பிரிவில் உள்ளனர். அவர்களை பழங்குடி பட்டியலில் சேர்ந்தால் தங்களது வாய்ப்புகள் பறிபோகும் என குக்கி பிரிவினர் நினைக்கிறார்கள்.

2023 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் தேதி, எஸ்.டி. பட்டியலில் மைதேயி பிரிவைச் சேர்ப்பதற்கான பரிந்துரைகளை ஒன்றிய அரசுக்குச் சமர்ப்பிக்க மணிப்பூர் மாநில அரசுக்கு மணிப்பூர் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இது குக்கி சமூகத்தவரை கோபம் கொள்ள வைத்தது. இதனை உணர்ந்து செயல்படவில்லை முதலமைச்சர் பிரேன் சிங். இப்படி ஒரு மோதல் ஏற்படும் என்பதை கணிக்கத் தவறினார் பிரேன் சிங். போராட்டக்காரர்களை அழைத்து தொடக்கத்தில் பேசாமல் அமைதி காத்தார் பிரேன் சிங். இவர் மைதேயி பிரிவினருக்கு ஆதரவு தெரிவிக்கிறார் என்று குக்கி இனத்தினர் நம்பினார்கள். அப்படித்தான் பிரேன் சிங் நடந்து கொண்டார்.

குக்கி இனத்தவர் நடத்திய பேரணியைக் குலைக்கும் காரியங்களை மைதேயி இனத்தவர் செய்தார்கள். இது பெரும்பான்மை மாவட்டங்களில் வன்முறையாக மாறியது. இந்த வன்முறைகள் அனைத்தையும் மணிப்பூர் காவல் துறை வேடிக்கை பார்த்தது. மணிப்பூரில் துப்பாக்கிகள் சர்வ சாதாரணமாகக் கிடைக்கும். மேலும், காவல் நிலையங்களில் புகுந்து போராட்டக்காரர்கள் துப்பாக்கிகளைத் தூக்கிச் சென்றார்கள். அதையும் பிரேன் சிங் அரசால் தடுக்க முடியவில்லை.

**இதன் உச்சமாக இரண்டு பெண்கள் ஆடை களையப்பட்டு நிர்வாணமாக அழைத்துச் செல்லப்படுவதும் - அதனை பெரும் கூட்டமானது வேடிக்கை பார்த்தபடி நடந்து செல்வதுமான காட்சிகள் வெளியானது.**

‘தினத்தந்தி’ நாளிதழ் பிரேன் சிங்கின் பேட்டியை தலைப்புச் செய்தியாக 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளியிட்டது. பெண்கள் நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்டது பற்றி அந்த நிருபர் கேட்டபோது, “இது போல நிறைய நடந்துள்ளதே” என்று பதற்றமே இல்லாமல் சொன்னவர்தான் பிரேன் சிங்.

2023 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் தேதி இந்த கொடூரச் சம்பவம் நடந்தது. இந்த வீடியோ ஜூலை மாதம் வெளியானது. வெளியான பிறகு, ஜூலை 18 ஆம் தேதிதான் கொடூரத்துக்குக் காரணமான சிலரை கணக்குக் காட்டுவதற்காக கைது செய்தார் பிரேன் சிங். இதன் பிறகுதான் ‘ஐயோ எவ்வளவு கொடூரம் நடந்து விட்டது’ என்று இந்த நாட்டின் பிரதமர் மோடி பேட்டி அளித்தார்.

பேட்டி அளித்தாரே தவிர பிரதமர் மோடி, இந்த இரண்டு ஆண்டு காலத்தில் ஒரு முறை கூட மணிப்பூர் செல்லவில்லை. நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக்குக் கூட அவர் மணிப்பூர் போகவில்லை. உள்துறை அமைச்சர் அமித்ஷா ஒருமுறை போனார். அத்தோடு சரி.

ஆனால் மணிப்பூர் இந்த இரண்டு ஆண்டுகளும் எரிந்து கொண்டுதான் இருந்தது. ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் இதுவரை கொல்லப்பட்டு இருக்கலாம். அமைதி என்பதே போய்விட்டது.

பிரேன் சிங் பதவி விலகிய பிப்ரவரி 9 ஆம் தேதியன்றுகூட மணிப்பூர் ரிசர்வ் படை முகாமில் இருந்து துப்பாக்கிகள் கொள்ளையடிக்கப்பட்டன. தௌபால் மாவட்டத்தில் இந்திய ரிசர்வ் படை முகாமுக்குள் ஆயுதங்களுடன் புகுந்த மர்ம கும்பல், அங்கிருந்த துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் எடுத்துச் சென்றுள்ளது. 6 தானியங்கி துப்பாக்கிகள், 3 ஏகே ரக துப்பாக்கிகள், 270 தோட்டாக்கள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது. இதுதான் கடந்த இரண்டு ஆண்டு மணிப்பூர் காட்சிகள் ஆகும். இதனை தடுக்கத் தவறியது பிரேன் சிங் மட்டுமல்ல, ஒன்றிய பா.ஜ.க. அரசும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டாமா?

**‘மைதேயி குழுக்கள் மாநில அரசின் ஆயுதங்களைக் கொள்ளையடிக்க அனுமதிக்கப்பட்டார்கள்’ என்ற பொருளில் பிரேன் சிங் பேசிய ஆடியோ ஒன்று சமீபத்தில் வெளியானது. இது தொடர்பாக விசாரித்தது உச்சநீதிமன்றம். ‘இந்த ஒலிப்பதிவின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து சீலிடப்பட்ட உறையில் எழுதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுங்கள்’ என்று மத்திய தடய அறிவியல் ஆய்வகத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு போட்டுள்ளது. இதன்பிறகுதான் பிரேன் சிங் பதவி விலகி இருக்கிறார்.**

**2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பதவி விலகி இருக்க வேண்டிய பிரேன் சிங், 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பதவி விலகி இருக்கிறார். இவரை ஆள அனுமதித்தது பிரதமர் மோடியின் குற்றமல்லவா? உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் குற்றமல்லவா?**



நீர்வளத் துறை மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில் கல் குவாரிகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்தும் அதன் நீட்டிப்பு வழங்குவது குறித்து கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்க உறுப்பினர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (12.02.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் தலைவர் மு.தீனபந்து, (ஓய்வு), புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் எ.சரவணவேல்ராஜ், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு – கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்

## மாபெரும் கிரிக்கெட் போட்டி! துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்து பரிசளிக்கிறார்!

### அமைச்சர்கள் – எம்.பி.க்கள் – மேயர்கள் – எம்.எல்.ஏ.க்கள்– தலைமைக் கழக நிர்வாகிகள் போட்டியில் பங்கேற்பு! தயாநிதி மாறன் எம்.பி. அறிவிப்பு!

சென்னை, பிப். 14 -

கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெறும் மாபெரும் கிரிக்கெட் போட்டியின் துவக்க விழாவிலும், பரிசளிப்பு விழாவிலும் கழக இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கிறார்.

மேலும் அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கின்றனர் என்று கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன், எம்.பி, அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

கழகத் தலைவர், திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் நடைபெறும் கிரிக்கெட் போட்டியில் சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகளுக்கிடையே வருகின்ற 2025, பிப்ரவரி 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் சென்னை கடற்கரை - காமராஜர் சாலையில் அமைந்துள்ள சேப்பாக்கம், மெரீனா விளையாட்டு மைதானத்தில் “தலைவர் 72” கோப்பைக்கான மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது, இப்போட்டியினை கழக இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைப்பதோடு பிப்ரவரி 16, ஞாயிறு மாலை நடைபெறும் பரிசளிப்பு விழாவிலும் பங்கேற்க உள்ளார்கள்.

மெரீனா விளையாட்டு மைதானத்தில் பிப்ரவரி 15 மற்றும் 16 ஆகிய நாட்களில் நடைபெறும் கிரிக்கெட் போட்டியில் பல்வேறு அணிகளின் சார்பில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, சென்னை மாநகர மேயர் திருமதி பிரியா ராஜன், தலைமை நிலையச் செயலாளரும், வீட்டு வசதி வாரியத் தலைவருமான பூச்சி எஸ்.முருகன், கழகத் துணை அமைப்பு செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ., மாவட்டக் கழகச் செயலாளர்கள் நே.சிற்றரசு, மயிலை த.வேலு, எம்.எல்.ஏ., மருத்துவர் பொன் கௌதம சிகாமணி, ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., மருத்துவர் நா.எழிலன், சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ, வைரமுத்து ராஜா, எம்.எல்.ஏ., ஐ.பி செந்தில் குமார், எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபினேசர், எம்.எல்.ஏ., ஜே.எல்.ஈஸ்வரப்பன், எம்.எல்.ஏ., எம்.பி., மு.பெ.கிரி எம்.எல்.ஏ., எஸ்.ஸ்டாலின் குமார், எம்.எல்.ஏ., ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, எம்.எல்.ஏ., எஸ். அரவிந்த் ரமேஷ், எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல், எம்.எல்.ஏ., திருமதி ஆ. தமிழரசி ரவிக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் விளையாடுகின்றனர் என தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன், எம்.பி. தெரிவித்துள்ளார்.

### கடலூர் மாவட்டத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

## விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மேற்கொண்டார்!

கடலூர், பிப். 14 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்து புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.02.2025 மற்றும் 22.02.2025 ஆகிய இரு தினங்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்து புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டத்திற்கும் சுற்றுப்பணம் மேற்கொண்டு களஆய்வு மேற்கொள்ளுதல், முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்ததல், பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் அரசு துறைகளின் வாயிலாக பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி வருகிறார்.

அவ்வகையில் திரு நெல்வேலி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களை தொடர்ந்து கடலூர் மாவட்டத்தில் 21.02.2025 அன்று கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் நடைபெறவுள்ள அரசு நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முடிவுற்ற திட்டப் பணிகளை பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கவுள்ளார் தொடர்ந்து 22.02.2025 அன்று வேப்பூர் வட்டம் திருப்பெயர் பகுதியில் மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில் நடைபெறவுள்ள பெற்றோரை கொண்டாடுவோம் நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளார் என தெரிவித்தார்.

தொடர்ந்து கடலூர் மாநகராட்சி அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில் வழங்கப்படவுள்ள நலத்திட்ட உதவிகள், பல்வேறு துறைகளின் வாயிலாக தொடங்கி வைக்கப்படவுள்ள திட்டப்பணிகள் மற்றும் விழாவில் பங்கேற்பவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் உள்ளிட்ட விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா, துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். ஜெயக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், மாநகராட்சி ஆணையாளர் மரு.எஸ்.அனு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் இரா. சரண்யா உட்பட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## வங்கதேசத்தில் வன்முறையால் 1,400 பேர் உயிரிழப்பு!

டாக்கா, பிப். 14 -

வங்கதேசத்தில் வன்முறையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,400ஐ தாண்டும் என ஐ.நா. மனித உரிமை ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது.

வங்கதேசத்தில் ஆட்சி மாறியிருந்தாலும் நிர்வாக அமைப்பில் மாற்றங்கள் ஏற்படவில்லை என ஐ.நா. அறிக்கையில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. போராட்டங்களின் போது மனித உரிமை மீறல் நடந்துள்ளது.

இது குறித்து விசாரனை நடத்த வேண்டும் என ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.



நகர்ப்புற உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோரிடம், சிவகாசி மாநகராட்சி மழைநீர் வடிகால் சாலைகள் மற்றும் தெருவிளக்குகள் உள்ளிட்ட வளர்ச்சி பணிகள் குறித்து சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், தி.மு.க. மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் சார்பில் மனு அளிக்கப்பட்டது.